සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

පළමුවාර අවසාන ඇගයීම
முதலாம் தவணை பரீட்சை - 2018
**First Term Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 07 | විෂයය / பாடம் / Subject: வரலாறு | පත්‍රය / வினாத்தாள் / **Paper**: **I,II** | කාලය / காலம் / **Time**: 2Hour |

**கவனத்திற் கொள்க.**

- **சகல வினாக்களுக்கும் விடை தருக.**
- **பகுதி – I இல் 01 – 20 வரையான சனல வினாக்களுக்கும் மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. எமது புராதன மக்களின் பிரதான வாழ்வாதாரமாக காணப்பட்ட தொழில்,

    1. சேனைப் பயிர்ச்செய்கை 2. விவசாயம்
    3. வர்த்தகம் 4. மந்தை வளர்ப்பு

02. நவதெளி சேனை எனப்படுவது,

    1. உழுந்து பயிரிட உழப்பட்ட நிலம்.
    2. செழிப்பான விவசாய நிலம்
    3. தீவைத்து ஒழுங்கமைக்கப்பட்ட புதிய பயிர் நிலம்.
    4. வனத்திற்கருகில் உள்ள நிலம்.

03. வயல்களில் கிருமிகளை ஒழிக்க பின்வருவனவற்றில் எமது முன்னோர் எதனை பயன்படுத்தினர்?

    1. தென்னை மட்டையும் தேங்காய் எண்ணெயும்.
    2. வேப்பங்குச்சியும் வேப்பெண்ணெயும்
    3. காஞ்சிரைக் குச்சியும் இலுப்பெண்ணெயும்.
    4. தென்னம் ஈர்க்கும் வேப்பெண்ணெயும்.

04. புராதன சமூகத்தில் பிரபல்யமாக காணப்பட்ட மந்தை வளர்ப்பு,

    1. மாடு வளர்ப்பு 2. செம்மறியாடு வளர்ப்பு 3. கோழி வளர்ப்பு 4. பன்றி வளர்ப்பு

05. புராதன காலத்தில் காணப்பட்ட இடையர்களின் கிராமம்,

    1. கசிகாரகாம 2. கோபாலகாம 3. பேஷகாரகாம 4. கும்பகாரகாம

06. மைனாவின் தோலைப் உபயோகப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில்,

    1. இரும்பு கைத்தொழில் 2. நெசவுக் கைத்தொழில்
    3. சப்பாத்து கைத்தொழில் 4. மட்பாண்ட கைத்தொழில்

07. ருவன்வெலிசாயவை அலங்கரிப்பதற்காக உரோமிலிருந்து சிவப்பு மணிகளை கொண்டு வந்த மன்னன்,

1. துட்டகைமுனு 2. வலகம்பாகு 3. மகாசேனன் 4. பாதிகாபயன்

08. தமது புதல்விகளை சமையற்கலையில் விறபன்னர்களாக்கும் பொறுப்பு பெற்றோரிடம் காணப்பட்டதாக தகவல் கூறும் நூல்,

1. மகாவம்சம் 2. சகஸவத்தூபகரணய 3. சிஹலவத்து 4. புத்சரண

09. புராதன சமூகத்தில் காணப்பட்ட திருமண சடங்கு சம்பந்தமான பொருத்தமற்ற கூற்று,

1. பெற்றோரின் ஆசீர்வாதத்தைப் பெறுதல் அவசியம்.
2. சம்பிரதாயங்களுக்கு பிரதான இடமளித்தல் வேண்டும்.
3. தமது குடும்பத்துக்கு தகுதியான ஒருவருடன் விவாகம் செய்தல் வேண்டும்.
4. தமது சொந்த விருப்பத்திற்கு முதலிடம் கொடுத்தல் வேண்டும்.

10. புராதன சம்பிரதாயங்கள் பழக்க வழக்கங்கிலிருந்து தற்காலத்திற்கு பெறக்கூடிய படிப்பினை,

1. மூத்தோருக்கு பணிவிடை செய்தல்.
2. அவசரத்திற்கு பணம் பதணடம் கொடுத்துதவுதல்.
3. மரணச் சடங்குகளின் போது உதவுதல்.
4. ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.

11. இரண்டாம் தடோபதீச மன்னனிடமிருந்து பாதுகாப்பு பெரும்பொருட்டு இளவரசன் மானவர்மன் இந்தியாவின் எந்த இராச்சியத்திற்கு தப்பியோடினான்?

1. கேரள இராச்சியம் 2. பாண்டிய இராச்சியம் 3. பல்லவ இராச்சியம் 4. சோழ இராச்சியம்

12. முதலாம் சேன மன்னனின் காலத்தில் இலங்கையின் மீது ஆக்கிரமிப்பு நடாத்திய பாண்டிய மன்னன் யார்?

1. ஶ்ரீமார வல்லபன் 2. இரண்டாம் நரசிங்கவர்மன்
3. முதலாம் நரசிங்கவர்மன் 4. இரண்டாம் வரகுணவர்மன்

13. இரண்டாம் சேன மன்னனின் சேவைகளுள் ஒன்று,

1. ரிட்டிகலை பாதையை அமைத்தமை.
2. மிகிந்தலை வைத்தியசாலையை அமைத்தமை.
3. நோயிளிகளுக்கு தானசாலைகள் அமைத்தமை.
4. பத்து கிராமங்களுக்கு ஒரு வைத்தியரை நியமித்தமை.

14. மானவர்ம மன்னன் காலத்தில் காணக்கூடியதாகவிருந்த ஓர் சிறப்பம்சம்,

1. உட்பூசல்கள் அதிகமாகியமை.
2. அரசுரிமையை அலட்சியப்படுத்தி ஆட்சியைப் பெற்றமை.
3. தந்தையிடமிருந்து மகனுக்கு மட்டும் அரசுரிமை கிட்டியமை.
4. புராதன இராச்சிய அரசுரிமை மறையை மீண்டும் நடைமுறைப்படுத்தியமை.

15. பத்து கிராம ஆட்சி மற்றும் குற்ற வழக்குகள் தொடர்பான சட்டதிட்டங்கள் அடங்கும் கல்வெட்டு,

1. பதுளை தூண் கல்வெட்டு
2. மிகிந்தலை சுவர் கல்வெட்டு
3. வேவெல்கட்டிய கல்வெட்டு
4. இரிப்பின்னியாவை கல்வெட்டு

16. புராதன காலத்தில் மன்னனுக்கு உதவும் ஏப்பா, மாப்பா எனும் பதவிகளைப் பெற்றவர்கள்,

1. அரச சேனாதிபதிகள்
2. அரச அதிகாரிகள்
3. அரச புரோகிதர்கள்
4. அரசகுடும்பத்து இளவரசர்கள்

17. மானவர்ம அரச குடும்பத்தில் தூரதிஷ்டமான காலம் எம்மன்னனின் காலத்தில் உருவாகியது?

1. ஐந்தாம் மகிந்தன்
2. நான்காம் மகிந்தன்
3. இரண்டாம் தப்புல
4. ஒன்பதாம் அக்கபோதி

18. பின்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான தென்னிந்திய இராச்சியம் எது?

- தென்னிந்திவின் கிழக்கு கரைக்கு அண்மையில் அமைந்துள்ளது.
- அதன் தலைநகரம் மதுரை.
- இலங்கைக்கு மிக அருகில் உள்ள தென்னிந்திய இராச்சியம்.

1. சோழ இராச்சியம்
2. பல்லவ இராச்சியம்
3. பாண்டிய இராச்சியம்
4. காலிங்க தேசம்

19. இராஜஇராஜன் மற்றும் இராஜேந்திர சோழர்களின் ஆக்கிரமிப்பில் வீழ்ச்சியடைந்த இலங்கையின் இராசதானி,

1.கோட்டை 2. கம்பளை 3. பொலனறுவை 4. அநுராதபுரம்

20. ஐம்பத்து மூன்று வருடங்களுக்கு அதிக காலம் சோழ மன்னர்களிடம் இருந்த இராசரட்டையை விடுவித்த இலங்கை மன்னன்,


1. நிஸ்ஸங்கமல்லன்
2. முதலாம் விஜயபாகு
3. இரண்டாம் விஜயபாகு
4. முதலாம் பராக்கிரமபாகு

# பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**
- **மொத்தமாக ஐந்து வினாக்களுக்க விடையளிக்க.**

01) பின்வரும் A,B உருக்களின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.


**A.**



1. உரு Aயில் உள்ள காசிற்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
2. இது எப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?
3. அதனை எவ்வுலோகத்தைக் கொண்டு உருவாக்கியுள்ளனர்?
4. அதில் காணப்படும் ஒரு குறியீட்டினைக் குறிப்பிடுக.

(2x4=8 புள்ளிகள்)

**B.**



1. உரு B யில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில் எது?
2. இக்கைத்தொழிலில் ஈடுபடுவோரை எவ்வாறு அழைத்தனர்?
3. இங்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
4. இவ்வுபகரணத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யும் ஒரு பொருளைப் பெயரிடுக.

(2x4=08 புள்ளிகள்)

02) I. சேனையைக் குறிப்பிடப் பயன்படுத்தும் பெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

II. சேனையை உருவாக்கும்போது பின்பற்றப்படும் காரியங்கள் இரண்டைத் தருக. (04 புள்ளிகள்)

III. சேனையைப் பாதுகாக்க, விவசாயிகள் எவ்வாறு செயற்பட்டனர் என்பதைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

03) I. தோணிகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நெற்பயிர்ச்செய்கை செய்யப்படும் போகங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

II. வயல் ஒன்றை உருவர்குவதில் விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் செயன்முறைகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. பயிர்களை பாதுகாக்கும் பொருட்டு கையாண்ட பாரம்பரிய முறைகள் இரண்டை விளக்குக. (05 புள்ளிகள்)

04) I. பசுக்களிலிருந்து பெறப்பட்ட போசணையுள்ள உணவுகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

II. புராதன காலத்தில் காணப்பட்ட கைத்தொழில்கள் நான்கைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

III. பதுளை தூண் கல்வெட்டு தொடர்பிலான பின்வரும் தகவல்களைத் தருக.

A – அதனை நிர்மாணித்த மன்னன்

B – அதில் காணப்படும் தகவல்கள் (05 புள்ளிகள்)

05)I. புராதன காலத்தில் எமது நாட்டுடன் வர்த்தக தொடர்பு கொண்டிருந்த நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

II. வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இரண்டு வீதம் தருக. (04 புள்ளிகள்)

III. புராதன காலத்தில் இந்நாட்டில் காணப்பட்ட வெளிநாட்டு வர்த்தகத்தின் தன்மை பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக. (05 புள்ளிகள்)

06) I. பின்வரும் அரசர்களின் அரச வம்சங்கள் எவை?

A- வசப மன்னன் B- தாதுசேன மன்னன் (02 புள்ளிகள்)

II. மானவர்ம அரச பரம்பரை ஆரம்பமாவதற்கு முன் இந்நாட்டின் அரசியல் துறையில் காணக்கூடியதாக இருந்த இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. மானவர்ம மன்னனின் சரித்திலிருந்து நாம் பெறக்கூடிய வழிகாட்டுதல்கள் இரண்டைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

07) I. அநுராதபுர யுகத்தில் அரசனுக்கு ஒத்துழைப்பு தந்த அதிகாரிகள் இருவரைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

II. நாட்டின் பாதுகாப்பிற்காக திட்டமிடலில் மன்னரால்மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடு.க. (04 புள்ளிகள்)

III. புராதன காலத்தில் காணப்பட்ட சட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதனை ஐந்து வாக்கியங்களினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)